# அமர் சேவா சங்கம், ஆய்க்குடி
# தலைவர் அறிக்கை

# 2019-2020

பேரன்புடையீர்.

நமஸ்காரம். வாழ்க வளமுடன், வாழ்க வையகம்.

1993 ஜூலை 24 அன்று, அமர் சேவா சங்கத்திற்கு வருகை தந்து, சுவாமி சிவானந்தா பிளாக்-ஐ திறந்து வைத்து, சங்கம் தனித்துவத்தோடு செயல்பட தீர்க்க தரிசனத்துடன் ஆசி வழங்கிய நமது முதல் Patron-in-Chief பாரத ரத்னா Dr.C.சுப்ரமணியம் அவர்கள், 1993ம் ஆண்டு செப்டம்பர் மாத Bhavan's Journal இதழில் "Human Wonder" என சங்கத்தைப் பாராட்டியதைப் போற்றி நினைவு கூர்வோமாக.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பத்மஸ்ரீ விருது சங்கத்தின் முன்னாள், இன்னாள் பணியாளர்கள், நிர்வாகக்குழு, பொதுக்குழு, அறிவுரைக்குழு, நிதி நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோரது அயராத உழைப்பிற்கும், உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள், நலம்விரும்பிகள், தன்னார்வத் தொண்டர்கள், நமது சேவையைப் பயன்படுத்திக் கொள்வோர், நமக்குப் பயிற்சி அளித்து நம்மை வழிநடத்தும் நிறுவனங்கள், மத்திய, மாநில அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வருவாய்துறை மற்ற துறைகளை சார்ந்த அதிகாரிகள், பணியாளர்கள் போன்றோரது முழுஒத்துழைப்பைமுயே சாரும். எல்லாவற்றிக்கும் மேலாக இறைஅருள் நமக்கு இருந்துவருகிறது. வருங்காலத்தில் செயலர் திரு.எஸ்.சங்கரராமன், உறுப்பினர்கள், பணிபுரியும் அன்பர்கள் ஆகியோருக்கும் இதுபோன்ற அங்கீகாரம் கிடைக்க வேண்டும்.

நமது Patron-in-Chief Dr.M.S.சுவாமிநாதன் அவர்கள் மற்றும் நமது Patron திரு.N.வாகுல் அவர்களை செயலர் S.சங்கரராமனும் அடியேனும் அவ்வப்போது சந்தித்து நமது செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி குறித்து தெரிவித்து வருகிறோம். மத்திய அரசு பத்மஸ்ரீ விருதிற்கு சங்கத்தின் தலைவர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களை தேர்வு செய்து 25-01-2020 அன்று அறிவித்தது. அறிவிப்பு வெளியிடபட்டதை அடுத்து M.S.சுவாமிநாதன் Research Foundation சார்பில் 16-03-2020 அன்று பத்மஸ்ரீ விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட திரு.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களையும் மதுரை திரு.மனோகர் தேவதாஸ் அவர்களையும் கௌரவித்தார்கள். பத்திரிகையாளர் திரு.N.ராம் அவர்களும், டாக்டர்.M.S.சுவாமிநாதன் அவர்கள் இருவரது பணிகளையும் பராாட்டிப் பேசினார்கள். World Health Orgnasiation டாக்டர்.சௌமியா சுவாமிநாதன் அவர்களின் Covid-19 விழிப்புணர்வு பற்றிய குறும்படம் வெளியிடப்பட்டது. செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களும் உறுப்பினர் திரு.TV.சுப்ரமணியன் அவர்களும் அன்பர்கள் சிலரும் நிகழச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

Patron-ஆக மிகவும் ஆர்வத்துடன் செயல்பட்டு அறிவுரைகள் வழங்கி வந்ததோடு, நன்கொடையும் அளித்து ஆசிர்வதித்து வந்த திரு.S.V.மோனி அவர்கள் 24-01-2019

அன்று இறைவனடி சேர்ந்தது அவர்களது குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் நமக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக்கொள்வோமாக.

30/5/2018 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்று கொண்ட திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் IAS அவர்கள் அறிவுரைக்குழுவின் Ex-Officio Chair Person என்ற முறையில் 07-07-2018 அன்று நடைபெற்ற அறிவுரைக்குழு கூட்டத்தில் கலந்துக்கொண்டார்.

திருநெல்வேலி மாவட்டதிலிருந்து தென்காசி தனி மாவட்டமாக அறிவிக்கப்பட தமிழக அரசு முடிவ மேற்கொண்டதன் பேரில் இது தொடர்பாக பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் 19.08.2019 அன்று குற்றாலம் ஸ்ரீபாராசக்தி மகளிர் கல்லூரி வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.ஷில்பா IAS Special Officer திரு.அருண் சுந்தர் தயாளன் IAS மற்றும் சில அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றது. கருத்துக்கேட்புக் கூட்டத்தில் நாமும் நமது மக்கள் தொடர்பாளர் V. கல்யாணமும் கலந்துகொண்டு புதுகட்டடங்கள் கட்டும் போது மாற்றுதிறனாளிகள் பயன்படுத்தும் வண்ணம் சகல வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்தோம். இது தொடர்பாக தேவையான ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ள அமர் சேவா சங்கம் தயராகவுள்ளது என்பதையும் தெரிவித்தோம். கூட்டத்திற்கு தலைமையேற்ற திரு.K.சத்தியகோபால் IAS. Commissioner for Revenue Administration, மற்றும் தென்காசி தனிமாவட்ட உருவாக்கத்திற்கான சிறப்பு அதிகாரி திரு.G.K.அருண் சுந்தர் தயாளன் IAS அவர்களை நமக்கு மாவட்ட ஆட்சியர் அறிமுகம் செய்து வைத்தார். அவர்களையும் சங்கத்திற்கு வருமாறு கேட்டுக்கொண்டோம்.

பின்னர் 17-11-2019 அன்று தமிழக அரசின் முதன்மை செயலர் திரு.K.சண்முகம் IAS அவர்களை சென்னை தலைமை செயல் அலுவலகத்தில் சென்று சந்தித்து உரையாடும் போதும் திரு.G.K.அருண் சுந்தர் தயாளன் IAS அவர்களை சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிட்டியது. 22-11-2019 அன்று தென்காசியில் நடைபெற்ற தென்காசி மாவட்டம் அறிவிப்பு நிகழ்ச்சியில் நாமும். திரு.எஸ்.சங்கரராமன், திரு.T.V.சுப்பிமணியன் மற்றும் திருமதி.S.பட்டம்மாள் ஆகியோர் தென்காசி இசக்கி வித்யாஷரம் பள்ளியில் வைத்து நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதலைமைச்சர் திரு.எடப்பாடி K.பழநிசாமி, மாண்புமிகு துணை முதலமைச்சா திரு.O.பன்னீர் செல்வம், முதன்மை செயலாளர் ஆகியோரை சந்திக்கும் வாய்ப்பினை பெற்றோம். மாண்புமிகு முதலைமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.O.பன்னீர் செல்வம், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர்.V.சரோஜா 26-01-2020 அன்று குடியரசு தினவிழாவில் சந்திக்க முயன்று முடியாமல் ஆனதால் அவரவர் இல்லங்களில் சந்தித்து EI Conference-ல் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தோம் மற்றும் நமது EI Project 23 பிளாக் தமிழகம் முழுவதுமான அறிக்கை சமர்ப்பிக்க வாய்ப்பும் கிடைத்தது. பத்மஸ்ரீ விருது பெற்றமைக்காக அன்றைய தினம் தலைவர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் மற்றும் செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களை முதல்வர், துணை முதல்வர் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் சால்வை அணிவித்து பாராட்டி மரியாதை செலுத்தினார்கள். திரு.M.சங்கர் சகாயராஜ்.

திரு.S.அரவிந்த் குழுவினர் சென்னையிலையே சிலதினங்கள் தங்கி மாநில மறுவாழ்வு ஆணையர் மற்றும் அதிகாரிகளுடன் பல சுற்றுகள் பேச்சு வார்த்தை நடத்தி EI Project தொடர்பாக 23 பிளாக் மற்றும் மாநில முழுவதும் விரிவுபடுத்துதல் திட்டங்கள் குறித்து அறிக்கைகள் தயார் செய்தனர். Natioal Health Mission மற்றும் Planning Commission ஏற்பாடு செய்த கூட்டம் மற்றும் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டனர்.

திரு.G.K.அருண் சுந்தர் தாயளன் IAS அவர்கள் மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றதையொட்டி 17-01-2020 அன்று சங்கத்திற்கு விஜயம் செய்து சுமார் 3 மணி நேரம் செலவிட்டு நிதானமாக சுற்றிப் பார்த்து சங்கத்தில் பல்வேறு பிரிவு/ துறை தலைவர்களிடம் கலந்துரையாடி சங்கத்தைப் பற்றிய முழுவிவரங்களை கேட்டு அறிந்துகொண்டது எல்லோருக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது

நமது EI Scale up Projcect-க்கு தமிழக அரசு மறுவாழ்வுத்துறை மூலம் அறிவிக்கப்பட்டுள்ள அமர் சேவா சங்கத்திற்கான மானியத் தொகை ரூ.2 கோடியே 36 லட்சத்திற்கான அரசு ஆணை 09-12-2019 கையெழுத்திடப்பட்டு கிடைக்கப்பெற்றோம். விரைவில் வந்துசேருமென நம்புவோமாக. இந்நிதியை ஒதுக்குவதற்கு பேருதவி புரிந்த தமிழக அரசு தலைமை செயலாளர் திரு.K.சண்முகம் IAS அவர்கள், மாற்றுத்திறனாளி நலத்துறை செயலாளர் திரு.C.விஜய்ராஜ்குமார் IAS அவர்கள் மாற்றுத்திறனாளி நலத்துறை ஆணையர் திரு.ஜான்டாம் வாக்கீஸ் IAS அவர்கள், நிதிதுறை செயலர் திரு.S.கிருஷ்ணன் IAS அவர்கள் திட்டக்குழு தலைவர் திருமதி.ஜெயஸ்ரீ ரகுநந்தன் IAS ஆகியோரின் பங்கு மகத்தானதாகும்.

தூத்துகுடி மாவட்டத்தில் உள்ள 12 பிளாக்குகள் திருநெல்வேலி மாவட்டத்தில் 9 பிளாக்குகள், தென்காசி மாவடடத்தில் மீதமுள்ள 2 பிளாக்குகள் ஆக 23 பிளாக்குகள் EI Project திட்டங்கள் மேற்கொள்ளப்பட தமிழக அரசின் சார்பில் Rs.2 கோடியே 36 லட்சம் அனுமதி வழங்கப்பட்டு 8-10-2020 அன்று MOU கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த தகவலை தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

திரு.M.சங்கர் சகாயராஜ், திரு.S.அரவிந்த் குழுவினர் 23 பிளாக்கில் பணிபுரிவதற்கான CRW, Special Educator, Speech Trainer, Physioterhapist ஆகியோரை தேர்வு செய்து திருநெல்வேலி மதுரம் Hall-ல் வைத்து பத்துநாட்கள் 160 நபர்களுக்கு பயிற்சி அளித்தனர். 12-11-2020 அன்று தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளர்களை அழைத்து அறிமுக விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். திருநெல்வேலி, தூத்துக்குடி கலெக்டர்கள் சங்கத்தின் செயல்பாடுகளின் முழுமுயற்சிகளைப் பாராட்டி பேசினர். திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மாற்றுப்பணி காரணமாக கலந்துகொள்ள இயலவில்லை. இத்திட்டம் முழுமையாக வெற்றிபெற மாவட்ட நிர்வாகம் சார்பில் முழு ஒத்துழைப்பு நல்குமென உறுதி அளித்தனர்.

புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக 15-11-2020 அன்று பொறுப்பேற்ற டாக்டர்.சமீரன் அவர்களை பொறுப்பேற்ற 1மணி நேரத்திற்குள் அவர்களது அலுவலகத்திற்கு சென்று

தலைவர் எஸ்.ராமகிருஷ்ணன் சந்தித்து சங்கத்திற்கு வருகைதருமாறு அன்போடு அழைப்பு விடுத்தார். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டப்பட மாவட்ட மருத்துவமனை வளாகம் தேர்வு செய்யப்பட்டதை அடுத்து ஆய்க்குடி மணி பைபர்ஸ் உரிமையாளர் திரு.V.சுப்ரமணியன் மருத்துவக்கல்லூரி வளாகம் அமைய ஆய்க்குடி தென்காசி சாலையில் அமைந்துள்ள சுமார் 20 ஏக்கர் நிலத்தை தானமாக தமிழக அரசுக்கு வழங்க முன்வந்துள்ள செய்தியினை மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு தலைவர் எஸ்.ராமகிருஷ்ணன் எடுத்துச்சென்றார். இதனையடுத்து ஆட்சியர் அவர்கள் அவரை நேரில் அழைத்து உரையாடி பத்திர பதிவுகள் சரிபார்த்தபின் 12-12-2020 அன்று இடத்தை பார்வையிட வருகைபுரிந்தார். மருத்துவகல்லூரி வளாகம் இப்பகுதியில் அமைய உள்ளதை நாமும் வரவேற்போமாக. அன்று மதியமே மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கத்திற்கு விஜயம் செய்து 2.30 மணிநேரம் செலவிட்டு சங்க செயல்பாடுகளை பார்வையிட்டு தலைவர், செயலர் மற்றும் துறைத்தலைவர்கள் போன்றோருடன் கலந்துரையாடி பாராட்டுகளைத் தெரிவித்தார். மாவட்ட நிர்வாகம் அமர் சேவா சங்கப் பணிகளுக்கு முழுஒத்துழைப்பு அளிக்கும் என்ற உறுதி அளித்ததோடு EI Project நடவடிக்கைகளை மேற்கொள்ள தென்காசி மாவட்ட சார்பில் அமர் சேவா சங்கத்தை உள்ளடக்கி 21 நபர்கள் கொண்ட கமிட்டியை உருவாக்கி சுற்றறிக்கை அனுப்பியுள்ளார் என்ற நல்ல செய்தி தலைவணங்குவதுகுரியது.

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்களாக பொறுப்பேற்றுள்ள டாக்டர். K.செந்தில் ராஜ் IAS, திரு.V.விஷ்னு IAS இருவரையும் திரு.சங்கர் சகாயராஜ் குழுவினர் சந்தித்து சங்கத்தைப் பற்றிய முக்கிய விபரங்களை எடுத்துரைத்தனர். அவர்களும் முழு ஒத்துழைப்பு அளிப்பதாக வாக்களித்துள்ளனர். தலைவர், செயலர் இருவரும் மூன்று ஆட்சியாளர்களுடன் தொலைபேசி தொடர்பில் உள்ளனர்.

GCT-ians 76 Association மற்றும் 72 Association சார்பில் பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டதற்காக தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு 02-02-2020 மற்றும் 20-02-2020 அன்றும் வானம் எங்கள் வசப்படும் அமைப்பின் சார்பில் அதன் நிறுவனர் திரு.விஸ்வம் நடராஜன் Zoom Meeting-ல் 27-07-2020 அன்றும் முன்னாள் Addl.Advocate General திரு.T.R.ராஜகோபாலன், திருமதி.சீதாலெட்சுமி தம்பதியினர் அவர்களது மைலப்பூர் இல்லத்தில் வைத்து 19-02-2020 அன்றும் பாராட்டு விழா நடத்தினார்.

சென்னை பெருங்குடி MELSS நிறுவனத்தின் சார்பில் இயக்குநர்கள் திரு.N.ராமசந்திரன் மற்றும் திரு.T.ஸ்ரீனிவாசன் 14-3-2020 அன்றும் நமது கமிட்டி உறுப்பினர் திரு.T.V..சுப்ரமணியன் மற்றும் அவரது துணைவியார் திருமதி.சாரதா சுப்ரமணியன் அழைப்பின் பேரில் பெசண்ட நகர் ஸ்ரீரத்ன கிரிஸ்வரர் ஆலய இசைவிழாவில் 07-03-2020 அன்று கலந்துக்கொண்டு பாராட்டுகளையும், நன்கொடையினையும் பெற்றுக்கொண்டது மற்றும் திரு.சொர்ணமணி சார் அழைப்பின்பேரில் Triplicane Humour Club மாதந்திர கூட்டத்தில் தலைவர் 09-02-2020 அன்று கலந்துகொண்டு பாராட்டினையும், நன்கொடையும் பெற்றுக்கொண்டது குறிப்பிடதக்கது.

சாணக்யா தொலைக்காட்சி நிறுவத்தின் முதலாம் ஆண்டுவிழாவை முன்னிட்டு 16-03-2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அதன் நிறுவனர் திரு.ரெங்கராஜ் பாண்டே அவர்கள் பெரியவர்கள் திரு.குமரி ஆனந்தன். திரு.இல.கணேசன் முன்னிலையில் பிரபல நடிகர் திரு.ரஜினிகாந்த் அவர்களை கொண்டு சங்கத்திற்கு Rs.1 லட்சம் நன்கொடை வழங்க செய்தார். விழாவில் தலைவரும், செயலரும் கலந்துகொண்டனர்.

Governor தலைமையில் 12-03-2020 அன்று நடைபெற்ற NDSO எண்ணங்களின் சங்கமம் ஆண்டுவிழாவிலும், Governor அவர்களை சிறப்பு விருந்தினராக கொண்டு 04-12-2019 அன்று INS அடையாரில் கப்பற்படை தின விழாவிலும் தலைவர் கலந்துகொண்டார். கவர்னர் மற்றும் குருஜீ ஸ்ரீஸ்ரீரவிசங்கர் அவர்களை சிறப்பு விருந்தினர்களாக கொண்ட சென்னை வானவில் நிறுவனத்தார் 06-12-2019 அன்று ஏற்பாடு செய்திருந்த பாரதி பிறந்தநாள் விழாவில் தலைவரும் செயலரும் கலந்துகொண்டனர்.

திரு.V.K.ஜெயக்கொடி IAS அவர்களை அக்டோபர் முதல் மார்ச் வரை நமது சென்னை பயணத்தின் போது பலமுறை சந்தித்தோம். பலவகைகளில் அரசு அதிகாரிகளை சந்திக்க உதவி புரிந்தார்.

நவம்பர் 14, 2019 டயாபடிக் தினத்தை முன்னிட்டு சென்னை சில்க்ஸ் பெசன்ட் நகர் Beach-ல் ஏற்பாடு செய்திருந்த வாக்கதான் நிகழ்ச்சியில் தலைவர் எஸ்.ராமகிருஷ்ணன், திருவாளர்கள் T.நாகராஜன், E.கருப்பசாமி கலந்துகொண்டனர்.

14-11-2019 அன்று அடையாரில் நடைபெற்ற சென்னை பயணத்தின் போது C.K..ரெங்கநாதன் Cavincare அவர்களின் Pet Animals Care Centre திறப்பு விழாவில் தலைவர் அவர்கள் கலந்துகொண்டார். HH.ஜெகத்குரு விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், HH.சுவாமி ஓம்காரநந்தா, HH.சகடாபுரம் சுவாமிகள் ஆகியோரிடம் தலைவர் எஸ்.ராமகிருஷ்ணன் ஆசிபெற்றது குறிப்பிடத்தக்கது.

Hindu Spiritual Exhibition விழாவில் தலைமையேற்று ஆரம்பித்து வைத்த மாதா HH.அமிர்தநந்தமாயி அவர்களிடம் தலைவர், செயலர் ஆசி பெற்றனர்.

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புர்ஹிட் அவர்களை ராஜ் பவனில் இரண்டு முறை சந்தித்து EI Conference பிப்ரவரி 14, 15, மற்றும் 16 ஆகிய தேதிகளில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன், செயலர் திரு.எஸ்.சங்கரராமன், திரு.T.V.சுப்ரமணியன் மற்றும் சங்க அன்பர்கள் சிலர் நேரில் சென்று அழைப்பு விடுத்தனர். விழாவில் கலந்துகொண்ட ஆளுநர் சிறப்பாக உரையாட்டி சங்கத்தின் செயல்பாடுகளைப் பராாட்டி பேசியதோடு மட்டுமல்லாமல் தானாக முன்வந்து கவர்னர் நிதிதியிலிருந்து ரூ.51 லட்சம் சங்க சுற்றுசுவர் கட்ட நிதிஉதவி அளித்துள்ளார். இவை அனைவருக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. C-19 காரணமாக சுற்றுசுவர் கட்டும் பணி காலதாமதமாக தொடங்கப்பட்டு கட்டட பணி நடைபெற்று

வருகிறது. பிப்ரவரி 2021-க்குள் அத்தொகையினை கொண்டு சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு 7 அடி உயர கல்கட்டட சுவர் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 350 மீட்டர் நீளத்திற்கு வடக்குஎல்கையில் இப்பணி தொடரவேண்டியிருப்பதால் ஜூன் மாதத்திற்குள் நிறைவுசெய்யபபட்டு 2021 ஜூலை மாதம் கவர்னர் அவர்களை திறப்பு விழாவிற்கு அழைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எல்லாம் அவன் செயல்.

EI International Conference-ல் தமிழ்நாடு, பிற மாநில அன்பர்கள் மட்டுமல்லாமல் பன்னாட்டு அன்பர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தது பல தரப்பினராலும் பாராட்டப்பட்டது. செயலர் அவர்கள் இந்த நிகழ்வை நடத்த பல மாதங்களாக இரவு, பகலாக அவரது குழுவினரோடு உழைத்தது நல்ல பலனை சங்கத்திற்கு ஈட்டுகொடுத்துள்ளது. என்று சொன்னால் அது மிகையில்லை. துணை செயலர் திரு.V.கணேசன், திரு.P.S.கஸ்தூரி ரெங்கன் அவர்களும் பல தன்னார்வ தொண்டர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

புதுடெல்லி. ISSICON, வருட மாநாட்டை முன்னிட்டு 10-10-2019 to 13-10-2019 வரை நடைபெற்ற Innovation in Spine Care Worshop- ல் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. டெல்லி பயணத்தின் போது ISIC-மருத்துவமனையில் அக்டோபர் 8 to 14-ஆம் தேதி, CEAT விருந்தினர் மாளிகையில் அக்டோபர் 15 to 19-ஆம் தேதி, ஹோட்டல் Ginger-ல் அக்டோபர் 19 to 22-ஆம் தேதி மற்றும் அக்டோபர் 22-ஆம் தேதி இரவு Home Ministry-ல் பணிபுரியும் திரு.மணி அவர்களின் இல்லத்திலும் தங்கியிருந்தோம். தங்க வைத்ததும் சிறப்பாக விருந்தோம்பல் செய்ததும் மறக்க இயலாத அனுபவம். Maj.H.P.S.Alwalya, Dr.சாப்ரா, திரு.மாதவன் மற்றும் திரு.A.S..நாராயணன், திரு.செல்லோ கிரண் ஆகியோருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். Cmdr.N.ஷகானி, High Court Justice உயர்திரு.முரளிதர ஸ்ரீனிவாஸ், Supreme Court நீதிபதி உயர்திரு.ராமசுப்பிரமணியன். Late.A.S.சாஹுல், அவர்களின் புதல்வி திருமதி.பிரித்ஹவுர் திருமதி.கல்யாணி ராஜராம், திரு.பினய் குமார் IAS, செயலாளர், எ.்.கு அமைச்சகம், புதுடில்லி, திரு.N.சிவசைலம் ஐயர் IAS, சிறப்பு செயலாளர் (Logistics) வர்த்தகம் மற்றும் தொழில்துறை ஆகியோரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

உலகளவில் Covid-19 தொற்று நோய் பரவலால் பாதிப்பு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நமது நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்கிய நல்ல உள்ளம் படைத்த நன்கொடையாளர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

C-19 பாதிப்பினால் விருந்தினர்கள், தன்னார்வத் தொண்டு புரியும் அன்பர்களை நமது விருந்தினர் மாளிகையில் தங்குவதற்கு அனுமதிக்க இயலாத சூழல். இன்னும் சிறிது காலத்திற்கு அவற்றை தொடர்ந்து நடைமுறைப்பபடுத்த வேண்டிய கால கட்டாயத்தில் இருக்கிறோம். அனைவரும் இதைப் பொறுத்தருள வேண்டுகிறோம்.

C-19 ஆய்க்குடியிலும் சுமார் 150 நபருக்கு பாதிப்பு ஏற்பட்டு 4 உயிரிழப்பு ஏற்பட்டது. நமது பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்ட காலகட்டத்தில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட மருத்துவமனை, பேரூராட்சி நிர்வாகம், Quarantine முகாமில் பணியாற்றிய அன்பர்கள் ஆகியோர் சிறப்பாக பணிபுரிந்தது பாராட்டுக்குரியதாகும்.

C-19 பற்றிய அமர் சேவா சங்கத்தின் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் அனைவராலும் பாராட்டப்பட்டது. C-19 பாதிப்பு ஏற்பட்டபோது செயலர் அவர்களின் அறிவுரையின் பேரில் Tele-Rehab- Vbri above 6, below 6, Sangamam activity-லும் Online Class SSV Primary, Hr.Sec. School –லும் நடத்தப்பட்டு வருகிறது.

கிராமம் சார்ந்த மறுவாழ்வு செயல்பாட்டில் உள்ள மாற்றுத்திறன் படைத்த பயனாளிகளுக்கு Free-Ration மளிகை சாமான், எண்ணெய், அரிசி உட்பட்ட Pack சுமார் 1903 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இதற்காக APPI Project-லிருந்து நமக்கு Rs.9 லட்சம் நன்கொடை வழங்கினார்கள்.

2021 இறுதிக்குள் நமது வளாகத்திலும் அதைத் தொடர்ந்து சென்னையிலும் நமது அறிவுரைக்குழு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அமர் சேவா சாரதாம்பாள் ITI–யின் துவக்க விழா 08-10-2019 அன்று நடைபெற்றது. கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.KAM.அபுபக்கர் MLA அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார். COPA, DTP, Smartphone Technician cum App Tester, Cutting & Sweing போன்ற பயிற்சிகளுக்கு NCVT, New Delhi அங்கீகாரம் வழங்கியுள்ளது.

26-11-2019 அன்று Container House திறப்பு விழா நடைபெற்றது. இதில் திரு.RP.கிருஷ்ணமாச்சாரி அவர்கள் குடும்பத்துடனும், திரு.ஜானகிராமன் ராமசந்திரன், திரு.சொர்ணமணி சென்னை ஆகியோர் வருகை தந்து இந்த விழாவை சிறப்பித்தார்கள்.

வருடந்தோறும் நடைபெறும் நம்மிடம் பயிற்சி பெற்ற மாற்றுத் திறனாளி இளைஞர் யுவதிகளுக்கான ஒன்று கூடும் விழா 2020-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டார்கள். உபகரணங்கள் பழுது பார்த்து கொடுக்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிறப்பு விருந்தினராக திருமதி.சுலோச்சனா கிருஷ்ணமூர்த்தி, President, HCI, கனடா, சென்னை டாக்டர் மாலதி வெங்கட்ரமணி மற்றும் டாக்டர்.வெங்கட்ரமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

2019-ஆண்டு உலக மாற்றுத்திறனாளி நாள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தமுடியவில்லை. உலக மாற்றுத்திறனாளி நாள், சங்கமம் சிறப்பு பள்ளி, சிவசரஸ்வதி வித்யாலயா பள்ளிகளின் ஆண்டு விழா EI Conference முன்னிட்டு

மார்ச் மாதம் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் கோவிட்-19 lockdown ஆனதால் நடத்தமுடியாமல் ஆகிவிட்டது. மேலும் பணியாளர்களின் ஒன்றுகூடும் விழா, முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் ஒன்றுகூடும் விழா மற்றும் சதசண்டி யாகம் போன்ற விழாக்களும் நடத்தமுடியாமல் போனது வருத்தமே

3-12-2020 உலக மாற்றுத்திறனாளி நாளை முன்னிட்டு நமது கிராமம் சார்ந்த மறுவாழ்வு களப்பணி நடைபெற்றுவரும் 11-பிளாக்கில் ஒருமைப்பாட்டு சாவடி அமைக்கப்பட்டது.

நமது சிவசரஸ்வதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாணாக்கர்கள் வருடந்தோறும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுவருவது அனைவரும் அறிந்ததே. இந்த வருடம் கோவிட்-19 lockdown-னால் பள்ளி மாணாக்கர்களுக்கு LKG முதல் 10-வது வகுப்பு மற்றும் 11-வது வகுப்பு இரண்டு பாடங்கள் ஆண்டு இறுதி தேர்வு நடத்த முடியாமல் ஆகிவிட்டது. எனவே தமிழக கல்வித் துறை அனைத்து மாணாக்கர்களையும் அனைவரும் தேர்ச்சி என்ற அறிக்கையின் அடிப்படையில் அடுத்த வகுப்பிற்கு உயர்த்தப்பட்டார்கள்.

ISO- Internal and External Audit நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் Virutual மூலமாக 19-10-2020 அன்று BSI External Audit நடத்தப்பட்டது.

அரசு விதிமுறையின் அடிப்படையில் கட்டட அங்கீகாரம் பணிகளில் தேக்கநிலையில் இருப்பது தெரியவருகிறது. Kulkarni, GIC, EI, Promose Unit, MTU additional, Fooster Care-பிளாக் போன்றவற்றிற்கு கட்டட வரைபடம், கட்டட அங்கீகாரம் இல்லாமல் இருக்கின்றது அதற்கான வேலைகளை முனைப்புடன் செயல்படுத்திட வேண்டும்.

நமது வளாகத்திலுள்ளோர் அனைவரையும் அனைத்து விலங்கினங்கள் ஜீவராசிகளையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ அமர் விநாயகர் கோவிலில் வருஷாபிஷேகம் - 28-01-2020 அன்று எளிய முறையில் நடைபெற்றது.

சர்வதேச Early Intervention மாநாடு சென்னை ஹோட்டல் ரியாத்தில் வைத்து 13, 14 மற்றும் 15 பிப்ரவரி 2020-ல் நடைபெற்றது. UNICEF மற்றும் WHO, Govt.of India, Govt.of Tamilnadu and GCC -உடன் இணைந்து நமது EI Project சம்பந்தமாக இம்மாநாடு நடத்தப்பட்டது.. 13-02-2020 அன்று Pre-Conference Workshop நடைபெற்றது. சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.சரோஜா Pre-Conference Workshop-ஐ துவக்கி வைத்தார். மாற்றுத்திறனாளி நலத்துறை செயலாளர் திரு.விஜய்ராஜ்குமார் IAS அவர்கள் மாற்றுத்திறனாளி நலத்துறை ஆணையர் திரு.ஜான்டாம் வாக்கீஸ் IAS அவர்கள் கலந்துக்கொண்டனர். 14-02-2020 அன்று மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புர்ஹிட் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு இம்மாநாட்டை திறந்து வைத்து தலைமையுரை ஆற்றினார். சுலோசனா கிருஷ்ணமூர்த்தி, டாக்டர்.அரவி டாக்டர்.அன்று மாலையில் mVBR-EI மொபைல் அப்ளிகேஷன், அமர் சேவா வீடியோ மற்றும் தீம் பாட்டு

ஆகியவை Launch செய்யப்பட்டது. முன்னாள் தலைமை செயலாளர் திரு.வேத நாராயணன் IAS mVBR-EI மொபைல் அப்ளிகேஷனை Launch செய்தார். திரு.A.கிருஷ்ணமூர்த்தி, சேர்மன், Simson Group, திரைப்பட இயக்குநர் திரு.முத்துராமன், மாற்றுத்திறனாளி நலத்துறை இணைச் செயலாளர் திரு.முத்தையன் டாக்டர்.இளங்கோ, நிறுவனர், Vision Inspiring Ilango Foundation, Professional Speaker, Singer & World Record Holder போன்றோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். 15 பிப்ரவரி 2020 அன்று Valedictory விழா நடத்தப்பட்டது தலைமை விருந்தினராக திட்டக்குழு தலைவர் திருமதி.ஜெயஸ்ரீ ரகுநந்தன் IAS கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக திரு.இல கணேசன், திரு.T.S.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் தேர்தல் தலைமை ஆணையர், திரு.பாஸ்கர் ராமமூர்த்தி, இயக்குநர் IITM, சென்னை ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

40 ஆண்டுகால வரலாற்றில் மிக முக்கியமான மைல்கல் இந்த EI Conference என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த Conference தொடக்கத்திலிருந்து நம்முடன் பணியாற்றியும், Advisory Committee-யாகவும் Workshop-ல் Speaker-ஆகவும் இருந்த டாக்டர்.தினேஷ் கிருஷ்ணமூர்த்த, மேரி பிரேம், மிகச் சிறப்பாக செயல்பட்டனர். திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி அவர்களின் முழுமுயற்சி, நமது கமிட்டி உறுப்பினர்களின் ஒத்துழைப்பு, செயலர் அவர்களின் அயராத கடின உழைப்பு, திரு.சங்கர் சகாயராஜ் குழுவினர் மற்றும் Conference team-ல் பணியாற்றி சக பணியாளர்களின் முயற்சி, கடின உழைப்பால் வெற்றிகரமாக நடத்திமுடிக்கப்பட்டது. இவற்றின் மூலம் அமர் சேவா சங்கத்தைப் பற்றிய விழிப்புணர்வு, வளர்ச்சி நல்லபடியாக இருந்தது. நமது மறுவாழ்வு துறைப் பணியாளர்கள் அயல் தேசத்திற்கும் சென்று நமது Project, செயல்பாடுகள் சம்பந்தப்பட்ட Paper Presentation செய்வதற்கும் அங்கீகாரம் கிடைக்கப்பதற்கும் வாய்பபளித்து வருகிறது.

GCC விசயமாக அவ்வப்பொழுது இரவு, பகல் பாராமல் Online-ல் கலந்துரையாடல் செய்வதால் நமது Global வளர்ச்சி நல்லபடியாகயிருக்கிறது. செயலர் திரு.எஸ்.சங்கரராமன் தலைமையின் கீழ் திருவாளர்கள்.S.ராஜேஸ்வரன், M.சங்கர் சகாயராஜ், P.ராமசுப்ரமணியன், S.அரவிந்த, V.நவமணி, T.பரமகல்யாணி, P.பாலமுருகன் மற்றும் M.சத்யா ஆகியோர் நேரம் பார்க்காமல் செயலருடன் இணைந்து பணி செய்து நமது EI Project-ஐ முன் எடுத்துச் சென்றது பாராட்டுக்குரியதாகும்.

APPI, GCC, Oracle, Omcharity, Kalraman, HCL, SCB போன்ற Project-லிருந்து நமது செயல்பாட்டிற்கு நிதிஒதுக்கீடு செய்வதால் நமது செயல்பாடுகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அவற்றிற்கு நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

நமது மருத்துவ பரிசோதனை மையத்தின் விரிவாக்க கட்டிடத்திற்கான திறப்பு விழா 21-11-2020 அன்று நடைபெற்றது. திரு.R.அனந்த நாராயணன், CFO & Company

Secretary, G.R.தங்கமாளிகை நிறுவனம், சென்னை இக்கட்டடத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். திரு.G.ராஜேந்திரன், சேர்மன், திரு.G.R.ஆனந்த், நிர்வாக இயக்குநர், G.R.தங்கமாளிகை நிறுவனம் போன்றோர் Virutual மூலம் தலைமையுரை, சிறப்புரை ஆற்றினார்கள். திரு.சுகுனா சிங் IPS , திரு.M.வீரமணி, Head-Renewal Power, G.R.தங்கமாளிகை நிறுவனம் திரு.V.சுப்ரமணியன், உரிமையாளர், மணி பைபர்ஸ், குற்றாலம் திரு.N.சேகர் மாநிலத் துணைதலைவர், தமிழ்நாடு தொழில்துறை கூட்டுறவு வங்கி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் அடியேனும், செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களும் கலந்துகொண்டனர். இக்கட்டிடத்திற்கு சென்னை G.R.தங்கமாளிகை நிறுவனம் Rs.1 கோடி நிதியுதவியும், சென்னை, ஸ்டார் ஹெல்த் இன்ஸூரனஸ் நிறுவனம் Rs.5 Lakshs நிதியுதவியும், மதுரை, ஆரோ லேப் டிரஸ்ட் Rs.10 lakhs நிதியுதவியும் வழங்கியுள்ளார்கள்.

Solar, Gobar Gas, Fooster care, Rotary International Project ஆகியவற்றில் நமது கமிட்டி உறுப்பினர் திரு.P.S.கஸ்துர்ரி ரெங்கன் அவர்கள் முழுகவனம் செலுத்தி வந்தார். சமீபத்தில அவருக்கு Major Surgery நடந்தது. அவரது துணைவியாரும் கடந்த 1 ½ வருடமாக சிகிச்சையில் இருந்து வருகிறார். திரு.P.S.கஸ்துர்ரி ரெங்கன் அவரும் அவரது துணைவியாரும் விரைவில் பூர்ண குணமடைய ஆண்டவனை பிராரத்திப்போமாக

செயலாளர் திரு.S.சங்கரராமன் மற்றும் அவரது துணைவியார் திருமதி.ரமணி சங்கரராமன் இருவரும் தொடர்ந்து 16 ஆண்டுகளாக மும்பை மாரத்தான் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சாதனை படைத்து வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

பட்டுகோட்டையில் சங்கத்தின் well wisher திரு.M.S.ராஜேந்திரன் மிராசு 2 Ground (சுமார் 11 செண்ட்) காலிமனையை சங்கத்திற்கு நன்கொடையாக 04.07.2018 அன்று வழங்கியுள்ளார். விரைவில் நமது VBRI EI பணிகள் அப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கான முழுமுயற்சிகளை விரைவில் தொடங்கவேண்டும்.

சென்னை, தமிழ்நாடு மாற்றுத்திறளாளிகளின் கூட்டமைப்பு அறக்கட்டளை சார்பாக வருடந்தோறும் நடைபெறும் மாற்றத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டியில் தொடாந்து 18-ஆவது முறையாக நமது இல்லக் குழந்தைகள், பயிற்சி பெறும் இளைஞர்கள், யுவதிகள் Champtionship வாங்கி வருவது பாராட்டுகுரியதாகும்.

Guide Star, New Delhi நடத்திய India Generosity Run அக்டோபர் 2 முதல் 11-ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்த Fund Raising Event-ல் Running, Cycling, Skipping ஆகியவை நடத்தப்பட்டு ரூ.21.38 Lakhs நிதியுதவி கிடைக்கப்பெற்றோம். மேலும் நமது கிராமம் சார்ந்த மறுவாழ்வு களப்பணியாளர்கள், Below-6 and Above 6 குழந்தைகளின் பெற்றோர்கள், சங்கப்பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்,

முதுகுதண்டுவட பாதிக்கப்பட்ட பயனாளிகள், நலம்விரும்பிகள் ஆகியோர்கள் 10 நாட்கள் ஆங்காங்கே 7358 கி.மீ ஒடி இந்த இலக்கை எட்டினார்கள்.

VBRI-Above 6 செயல்பாட்டிக்கு HCL நிறுவனம் ரூ.25 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது.

Online வகுப்பிற்கு Standard Chartered Bank ரூ.40.75 Lakhs நிதியுதவி அளித்துள்ளது. Online வகுப்பிற்கு Smartphone பள்ளி குழந்தைகள் மற்றும் நமது இல்லக்குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அமர் சேவா Global Association என்ற கம்பெனி 09-11-2020 அன்று கம்பெனி சட்டம் Section 8-ன் கீழ் புதியதாக உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவற்றின் நிர்வாக உறுப்பினர்களாக திரு.எஸ்.ராமகிருஷ்ணன், திரு.எஸ்.சங்கரராமன், திரு.T.V..சுப்ரமணியன் மற்றும் செல்வி.S.பத்மாவதி ஆகியோர் முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். நமது m-VBRI Application-னின் IP License Sale செய்யும் வணிக வளர்ச்சி நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ராஜபாளையம், ராம்கோ சிமிண்ட நிறுவனம் நம்முடைய கட்டட வேலைக்காக 7000 மூடை சிமிண்ட் நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது. இதுவரை பள்ளி கட்டுமான பணிக்கு (Phase 3 & 4) முதல்கட்டமாக 2500 Bag வழங்கியுள்ளது.

Seshashayee Paper நிறுவனம் வருடந்தோறும் 20 டன் பேப்பர் நன்கொடையாக வழங்கி வருகிறது.

சென்னை Dr.மாலதி ரமணி, Dr.தமிழ்செல்வி. Dr.இந்துமதி ஆகியோர் அவ்வப்பொழுது மருத்துவ முகாம்களை நடத்தி உதவி வருகிறார்கள்.

பணியாளர்களுக்கு அவர்களுடைய திறன்களில் மேன்மையடைய அவ்வப்பொழுது பயிற்சிகள் சங்க வளாகத்திலும், வெளி இடங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது.

சாம்பவர்வடகரை பேரூராட்சிக்கு உட்பட்ட கம்பிளி-விந்தன்கோட்டை ரோடு, இண்ராயல் கம்பெனி அருகில் பம்புசெட், கிணறுடன் கூடிய சுமார் 16.34 ஏக்கர் புன்செய் நிலம் சங்கத்தின் விரிவாக்க திட்டங்களுக்காக வாங்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு Rs.1 கோடி 90 Lakhs ஆகும். தற்சமயம் சொட்டுநீர் பாசனம் மூலம் நெல்லி தோப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது. கமிட்டி உறுப்பினர் திரு.T.V.சுப்ரமணியன் அவர்களும் செயலர் திரு.எஸ்.சங்கராமன் அவர்களும் இதில் முழுகவனம் செலுத்தி வருகிறார்கள்.

சுலோசனா கார்டன்ஸ் வளாகம், விந்தன்கோட்டை வளாகம் மற்றும் கொடிக்குறிச்சி வளாகத்தில் வருகிற 10 ஆண்டுகளில் கட்டப்பட வேண்டிய பல்வேறு கட்டடங்கள் குறித்த Master Plan மற்றும் Project Proposal தயார் செய்வதற்கு நமது நலம்விரும்பி

திரு.K.ராமலிங்கம் சென்னை அவர்கள் அறிமுகத்தின்பேரில் M/s.C.R.Narayana Rao (Consultants) Pvt.Ltd., Mylapore, Chennai நிறுவனத்தை அனுகி நான்கு சுற்று கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 31-3-2022-க்குள்ளாவது Master Plan தயாரிப்புப் பணி நிறைவடைய வேண்டும்.

**<u>விருதுகள்</u>**

நியூயார்கின் MIT Solve என்ற நிறுவனம் நமது m-VBRI initiative செயல்பாட்டிற்கு – "Innovation Award" என்ற விருதினை 22-09-2019 அன்று வழங்கி கௌரவித்தது. இவ்விருதினை அமர் சேவா சங்கத்தின் சார்பாக நமது கமிட்டி உறுப்பினர் திரு.விஸ்வநாதன் கணேசன், டாக்டர் தினேஷ் போன்றோர் கலந்துக்கொண்டு இவ்விருதினை பெற்று வந்தார்கள்.

Zero Project Winner of Innovative Practice 2020 மாற்றுத்திறனாளிகளுக்கு ஒருங்கிணைந்த கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான புதுமையான பயிற்சி அளித்தமைக்கான விருது பிப்ரவரி 2020 வியன்னாவின் ஐக்கிய நாட்டு சபை வழங்கி கௌரவித்தது. இவ்விருதினை அமர் சேவா சங்கத்தின் சார்பாக திரு.சங்கர் சகாயராஜ், திரு.ராஜேஷ்வரன், திருமதி.கல்யாணி ஆகியோர் கலந்துக்கொண்டு இவ்விருதினை பெற்று வந்தார்கள்.

Cognizant Foundation-லிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கு நீண்ட காலமாக தொடர்ந்து சேவை செய்வதை பாராட்டி "Appreciation Award" என்றை விருது 23-09-2020 அன்று வழங்கி கௌரவித்தது.

MIDI-Award-நமது EI- Project-ன் "2020 மிகவும் ஊக்கமளிக்கும் கண்டுபிடிப்பு" விருது அமர் சேவா சங்கத்திற்கு வழங்கியுள்ளது. 100-க்கும் மேற்பட்ட டிஜிட்டல் பயன்பாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

2020 ஜுன் மாதம் அமர் சேவா சங்கம் 40-வது ஆண்டு ஆரம்பத்தில் அடியெடுத்து வைக்கிறது. 2021 ஜுன் மாதம் 40-வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் வண்ணம் சிறப்பு மலர் வெளியிடலாம். 2020 செப்டம்பர் மாத நடைபெறவுள்ள பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அடுத்த தலைமுறையினர் சங்கப் பொறுப்புகளை நிர்வகிக்க ஆலோசனைகள், கருத்து பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனபதையும் 2019-ஆம் ஆண்டு பொதுக்குழு தலைவர் அறிக்கையில் குறிப்பிட்டுயிருந்தோம். C-19 காரணமாக பொதுக்குழு 2020 டிசம்பர் மாதம் கூட்டப்படுகிறது. வருகிற ஆண்டிலாவது இதுகுறித்து கருத்துகள் ஆராயப்படவேண்டும் என்பதை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Early Intervention-ல் (0-6 வயது வரம்பு) ஆரம்பித்து பள்ளி பருவம், கல்லூரி பருவம், வருவாய் ஈட்டும் மற்றும் குடும்பத்தை நிர்வகிக்கும் பருவம், முதுமை பருவம் என மாற்றுத் திறனாளிகளின் நலனில் எவ்வாறு அக்கறை செலுத்த வேண்டும், இதில்

அமர் சேவா சங்கத்தின் பங்கு என்ன? மாநில, மத்திய அரசின் பங்கு என்ன? மாவட்ட நிர்வாகம் மற்றும் பஞ்சாயத்துகளின் பங்கு என்ன? பொது மக்கள், வேலை வாய்ப்பு அளிக்கும் நிறுவனங்கள், கல்வி மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள் போன்ற அமைப்புகளின் பங்கு என்ன? என்பனபற்றியெல்லாம் கருத்துகணிப்பு நடத்தப்படவேண்டும்.

Covid-19 Lockdown-ல் சில பணியாளர்களுக்கு வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளது அதற்காக வருந்துகிறோம். வருகிற ஆண்டில் நிலைமை விரைவில் சீரடைந்து சுகாதாரமாகவும், அமைதிகாப்பதாகவும், நன்மைப்பயப்பதாகவும் அமைய ஆண்டவனை வேண்டுவோமாக. நமக்கு சுய பாதுகாப்பு மிக மிக அவசியம் என்பதை உலகத்தில் உள்ள ஒவ்வொரு அன்பர்களும் உணரவேண்டும். அதற்கு ஏற்ற விதிமுறைகளை நாம் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அச்சம் கொள்ள தேவையில்லை ஆனால் அறிவு பூர்வமாக செயல்படவேண்டும்

**<u>இரங்கல் செய்தி</u>**

சங்கத்தின் முன்னாள் இணைச் செயலாளர் திரு.கண்ணன் என்ற இராமசுப்ரமணியன் அவர்களின் சகோதரர் திரு.ஆறுமுகசாமி 12-09-2019 அன்றும் இலத்தூர் திரு.சங்கரகிருஷ்ணன் 18-09-2019 அன்றும் நெடுவயல் திரு.சேதுராமலிங்க பிள்ளை 25-09-2019 அன்றும் நமது பொதுகுழு உறுப்பினர் மற்றும் சங்கத்தின் பால் மிகுந்த அக்கரை கொண்ட செல்வி.அருள்மொழி 28-09-2019 அன்றும் காஞ்சி சங்கராசாரியார் அவர்களின் தகப்பனார் திரு.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் 28-09-2019 அன்றும் முன்னாள் தேர்தல் கமிஷன் திரு.T.N.சேஷன் 16-11-2019 அன்றும் நமது முக்கிய நன்கொடையாளர் சென்னை திரு.புருஷோத்தமன் 24-11-2019 அன்றும் தூத்துக்குடி விசாகா ஹோட்டல் திரு.வரதராஜன் 19-11-2019 அன்றும் சென்னை திருமதி.சுப்புலெட்சுமி தியாகராஜன் 18-12-2019 அன்றும் நமது நன்கொடையாளர் திரு.வெங்கட்ராமன் 21-01-2020 அன்றும் சென்னை சிவானந்தா குருகுலம் தலைவர் திரு.ராஜாராம் 18-02-2020 அன்றும் திமுக பொதுச்செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் 07-03-2020 அன்றும் சென்னை German Consulate P.K.சங்கமேஸ்வரன் 12-03-2020 அன்றும் திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனை டாக்டர்.ராமகிருஷ்ணன் அவர்களின் தாயார் திருமதி.மங்கம்மாள் 12-03-2020 அன்றும் ஆயிரம் ஆண்டுகள் வரலாறு உடைய சிங்கம்பட்டி ஜமீன் இதன் 32-வது பட்டத்துக்காரர் முருகதாஸ் தீர்த்தபதி அவர்கள் 25-05-2020 அன்றும் சென்னை திருமதி.பத்மா அவர்களின் மருமகள் திருமதி.பவானி 27-06-2020 அன்றும் நமது பள்ளியின் முன்னாள் மேலாளர் திரு.ராம அய்யர் அவர்கள் 31-08-2020 அன்றும் நமது கமிட்டி உறுப்பினர் திருமதி.எஸ்.பட்டம்மாள் மேடம் அவர்களின் கணவர் திரு.ராமநாதன் 03-09-2020 அன்றும் சென்னை நமது நன்கொடையாளர் திரு.சொர்ணமுகி அவர்களின் தாயார் S.A.விசாலாட்சி 06-09-2020 அன்றும் பிரபல பாடகர் திரு.S.P.பாலசுப்பிரமணின் அவர்கள் 25-09-2020 அன்றும் சென்னை திரு. இராம கோபாலன் அவர்கள் 28-09-2020 அன்றும் நமது அறிவுரை குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் இந்தியன் வங்கி சேர்மன் திரு.M.கோபாலகிருஷ்ணன் அவர்கள் 30-09-2020 அன்றும் செய்துங்கநல்லூர் Engr.பரமசிவன் அவர்கள் 19-12-2020 அன்றும் இறைவனது திருவடி சேர்ந்தார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகக் குழு, பொதுக்குழு மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினர்கள் சங்கத்திற்கு முழு ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள். கடந்த 38 ஆண்டுகளில் சங்கத்தில் நடைபெற்ற நல்ல காரியங்களுக்கான பெருமை முன்னாள் மற்றும் தற்போதுள்ள 29 அன்பர்களைக் கொண்டஅறிவுரைக்குழு, 26 பேரைக் கொண்ட பொதுக்குழு, 11 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு, அயராது அல்லும் பகலும் பணிபுரிந்த, பணிபுரிந்து வருகின்ற அன்பர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும், அறிவுரை, ஆலோசனைகள் வழங்கி நம்மோடு இணைந்து செயல்பட்டு வரும் நிறுவனங்களையும், நலம்விரும்பிகளையும், நன்கொடையாளர்களையும், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி அன்பர்களையுமே சாரும். எல்லாவற்றிற்கும் மேலாக பகவானுடைய பரிபூரண அனுக்ரஹம் நமக்கு எப்பொழுதும் இருந்து வருகிறது.

நமது செயல்பாடுகள் சங்கத்திற்கு விஜயம் செய்யும் பல நல்ல உள்ளங்களாலும், நமது website-ஐ பார்வையிடும் சகோதர, சகோதரிகளாலும், பத்திரிகைகள், தொலைகாட்சிகள் போன்றவற்றில் நமது நிகழ்வுகளைக் காணும் அன்பர்களாலும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. செயலர், CSR Cell மக்கள் தொடர்பு பிரிவு மற்றும் The Amar Foundation நமது சங்கத்தின் நிதிநிலையை உயர்த்துவதில் காட்டும் விடாமுயற்சி, மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்கள் பல சமூக சேவை நிறுவனங்களுக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

பல நல்லிதயம் கொண்ட பெரியோர்களின் ஆசிகளாலும், ஆதரவினாலும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தனிநபர்கள் நன்கொடையாலும், உறுப்பினர்கள், பணியாளர்களின் இடைவிடாத உழைப்பினாலும் சங்கம் மேலும் பல சாதனைகளைப் படைக்கவும், சவால்விடப்பட்ட சகோதர, சகோதரிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படவும், சங்கப்பணியாளர்கள், நமது சேவையைப் பயன்படுத்திக் கொள்வோர், தன்னார்வத் தொண்டர்கள், உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள், நன்கொடை திரட்டி உதவுபவர்கள், இப்பகுதிவாழ் பொதுமக்கள் மற்றும் அனைவரும் தேக ஆரோக்கியத்தோடு, வளமான வாழ்வு பெறவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி பிரார்த்தித்துக் கொள்கிறோம். நமக்கெல்லாம் நல்லெண்ணங்களையும், தொலைநோக்குப் பார்வையினையும், திறமையினையும், குறிப்பாக தொண்டுள்ளத்தையும் மேன்மேலும் வழங்கி **Live To Serve** என்ற நமது வாசகத்தை, கொள்கையை அர்த்தமுள்ளதாக்க ஆண்டவன் என்றும் அருள்பாலிப்பாராக!!

நன்றி.

என்றும் இறைபணியில்,

எஸ்.ராமகிருஷ்ணன்
தலைவர்.

இடம்: ஆய்க்குடி.
நாள்: 27-12-2020.

| S.No. | Honoured By | Date |
|---|---|---|
| 1. | Mr. Johny Tom Vargheese, IAS<br>Director Commissioner for Welfare of the differently abled<br>Mr. C.Vijayarajkumar IAS<br>Principal Secretary for Welfare of the differently abled<br>Mr.S.Krishnan IAS, Finance Secretray<br>Ms. Jeyasri Raghunanthan<br>Secretary, Planning Commission | 04-10-2019 |
| 2. | Dr.Senthilkumar,<br>Mission Director, National Health Mission<br>Mr. C.Vijayarajkumar IAS<br>Principal Secretary for Welfare of the differently abled | 11-11-2019 |
| 3. | State Level Conference – Organised by planning commission | 14-11-2019<br>&<br>15-11-2019 |
| 4. | Mr.K.Shanmugam IAS, Chief Secretary, | 17-11-2019, |
| 5. | Dr. Aravindhan, Kauveri Hospital | 17-11-2019 |
| 6. | UNICEF TEAM | 18-11-2019 |
| 7. | His Excellency Governor of Tamilandu Mr. Banwarilal Purohit | 19-11-2019 |
| 8. | Mr. C.Vijayarajkumar IAS<br>Principal Secretary for welfare of the differently abled | 3-12-2019 |
| 9. | World Bank Officials | 07-12-2019 |
| 10. | Mr.K.Shanmugam IAS, Chief Secretary,<br>Mr.S.Krishnan, IAS, Finance Secretray<br>Mr. C.Vijayarajkumar IAS<br>Principal Secretary for Welfare of the differently abled | 09-12-2019 |
| 11. | Mr.M.R.Vijaya Baskar, Minister of Transport Department | 13-12-2019 |
| 12. | Mr.K.Pandiarajan, Minister of Tamil official Language and Tamil Culture<br>Mrs.Rajalakshmi, Minister of Athi Thiravida and Tribal Welfare Dr.V.Saroja, Minister of Social Welfare<br>Mr.Krishnan, IAS, Finance Secretray<br>Tenkasi S.Jawahar IAS, Transport Commissioner | 24-01-2020 |
| 13. | Anbagam- New building Inaguguration- TAP Varadhakutti | 25-01-2020 |
| 14. | Chief Minister House | 26-01-2020 |

| | | |
|---|---|---|
| 15. | Dy. Chief Minister House | 26-01-2020 |
| 16. | Social Welfare Minister House | 26-01-2020 |
| 17. | Mr.Kadampur Raj, Minister of Information and Publicity | 26-01-2020 |
| 18. | Director, IIT, Chennai along with Sankara Raman | 27-01-2020 |
| 19. | GCT-ians 76 Association | 02-02-2020 |
| 20. | Sri Ratna Giriswarar Alayam | 07-02-2020 |
| 21. | Triplicane Humour Club | 09-02-2020 |
| 22. | Dr.J.Radhakrishanan IAS<br>Secretary, Revenue Department | 10-02-2020 |
| 23. | Ramachandra Mission Heartfullness Institute | 18-02-2020 |
| 24. | Addl.Advocate General Mr.T.R.Rajagopalan and Mrs.Seethlakkshmi | 19-02-2020 |
| 25. | GCT-ians 72 Association | 20-02-2020 |
| 26. | MELS System | 14-03-2020 |
| 27. | M.S.Swaminathan,Research Foundation | 16-03-2020 |
| 28. | வானம் எங்கள் வசப்படும் - திரு.விஸ்வம் நடராஜன- | 26-07-2020 |